ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 2.7 – ஆனிரை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2.7 – ஆனிரை

‡ ஆனிரை மேய்க்க நீ போதி ⋆
அரு மருந்தாவதறியாய் ⋆
கானகம் எல்லாம் திரிந்து ⋆
உன் கரிய திருமேனி வாட ⋆
பானையில் பாலைப் பருகிப் ⋆
பற்றாதார் எல்லாம் சிரிப்ப ⋆
தேனில் இனிய பிரானே ! ⋆
செண்பகப் பூச் சூட்ட வாராய் ‖ **2.7.1** ‖

கரு உடை மேகங்கள் கண்டால் ⋆
உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள் ⋆
உரு உடையாய் ! உலகேழும் ⋆
உண்டாக வந்து பிறந்தாய் ! ⋆
திரு உடையாள் மணவாளா ! ⋆
திரு அரங்கத்தே கிடந்தாய் ! ⋆
மருவி மணம் கமழ்கின்ற ⋆
மல்லிகைப் பூச் சூட்ட வாராய் ‖ **2.7.2** ‖

மச்சொடு மாளிகை ஏறி ⋆
மாதர்கள் தம் இடம் புக்கு ⋆
கச்சொடு பட்டைக் கிழித்துக் ⋆
காம்பு துகில் அவை கீறி ⋆
நிச்சலும் தீமைகள் செய்வாய் ! ⋆

நீள் திருவேங்கடத்தெந்தாய் ! ⋆
பச்சைத் தமனகத்தோடு ⋆
பாதிரிப் பூச் சூட்ட வாராய் ‖ **2.7.3** ‖

தெருவின் கண் நின்றிள ஆய்ச்சி மார்களைத் ⋆
தீமை செய்யாதே ⋆
மருவும் தமனகமும் சீர் ⋆
மாலை மணம் கமழ்கின்ற ⋆
புருவம் கருங்குழல் நெற்றி ⋆
பொலிந்த முகிற் கன்று போலே ⋆
உருவம் அழகிய நம்பீ ! ⋆
உகந்திவை சூட்ட நீ வாராய் ‖ **2.7.4** ‖

புள்ளினை வாய் பிளந்திட்டாய் ! ⋆
பொரு கரியின் கொம்பொசித்தாய் ! ⋆
கள்ள அரக்கியை மூக்கொடு ⋆
காவலனைத் தலை கொண்டாய் ! ⋆
அள்ளி நீ வெண்ணெய் விழுங்க ⋆
அஞ்சாதடியேன் அடித்தேன் ⋆
தெள்ளிய நீரில் எழுந்த ⋆
செங்கழுநீர் சூட்ட வாராய் ‖ **2.7.5** ‖

எருதுகளோடு பொருதி ⋆
ஏதும் உலோபாய் காண் நம்பி ! ⋆
கருதிய தீமைகள் செய்து ⋆
கஞ்சனைக் கால்கொடு பாய்ந்தாய் ! ⋆
தெருவின் கண் தீமைகள் செய்து ⋆
சிக்கென மல்லர்களோடு ⋆

பொருது வருகின்ற பொன்னே ! ⋆
புன்னைப் பூச் சூட்ட வாராய் ॥ **2.7.6** ॥

குடங்கள் எடுத்தேற விட்டுக் ⋆
கூத்தாட வல்ல எம் கோவே ! ⋆
மடம் கொள் மதி முகத்தாரை ⋆
மால் செய்ய வல்ல என் மைந்தா ! ⋆
இடந்திட்டிரணியன் நெஞ்சை ⋆
இரு பிளவாக முன் கீண்டாய் ! ⋆
குடந்தைக் கிடந்த எம் கோவே ! ⋆
குருக்கத்திப் பூச் சூட்ட வாராய் ॥ **2.7.7** ॥

சீ மாலிகன் அவனோடு ⋆
தோழமை கொள்ளவும் வல்லாய் ! ⋆
சாம் ஆறவனை நீ எண்ணிச் ⋆
சக்கரத்தால் தலை கொண்டாய் ! ⋆
ஆம் ஆறறியும் பிரானே ! ⋆
அணி அரங்கத்தே கிடந்தாய் ! ⋆
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய் ! ⋆
இருவாட்சிப் பூச் சூட்ட வாராய் ॥ **2.7.8** ॥

அண்டத்தமரர்கள் சூழ ⋆
அத்தாணியுள் அங்கிருந்தாய் ! ⋆
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய் ! ⋆
தூ மலராள் மணவாளா ! ⋆
உண்டிட்டுலகினை ஏழும் ⋆
ஓர் ஆலிலையில் துயில் கொண்டாய் ! ⋆

கண்டுநான் உன்னை உகக்கக் ⋆
கருமுகைப் பூச் சூட்ட வாராய் ॥ **2.7.9** ॥

‡ செண்பக மல்லிகையோடு ⋆
செங்கழுநீர் இருவாட்சி ⋆
எண் பகர் பூவும் கொணர்ந்தேன் ⋆
இன்றிவை சூட்ட வா என்று ⋆
மண் பகர் கொண்டானை ⋆
ஆய்ச்சி மகிழ்ந்துரை செய்த இம் மாலை ⋆
பண் பகர் வில்லிபுத்தூர்க் கோன் ⋆
பட்டர்பிரான் சொன்ன பத்தே ॥ **2.7.10** ॥

அடிவரவு — ஆனிரை கரு மச்சொடு தெருவின்கண் புள்ளினை எருதுகளோடு குடங்கள் சீமாலிகன் அண்டத்து செண்பகம் இந்திரன்

ஆனிரை முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்